முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**முக்காலமும் உணர்ந்த முனிவனும் பொருளாதார மேதையுமான முருகப்பெருமான் அருளியது எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி பங்குனி மாதம் 17ம் திகதி முதல் பங்குனி மாதம் 24ம் திகதி வரை மார்ச் 31ம் திகதி முதல் ஏப்ரல் 6ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1.** ஞானபலமிக்க பாரதமே
ஞானிகளை வணங்கும் தமிழகமே
தானதருமமென சக்தி மிகுந்த
தமிழகம் பாரதம் தன்னில் நடக்கும்

**2.** நடக்கும் விளம்பி சேல் திங்களில்
நாட்டிடுவேன் மூவைவீர் திகதி மேல் அறுநான்கு திகதிவரை
**(விளம்பி வருடம் பங்குனி மாதம் 17ம் நாள் 31.03.2019, ஞாயிறு முதல் பங்குனி மாதம் 24ம் நாள் 07.04.2019, ஞாயிறு முடிய)**
நடக்கும் நிகழ்வாக வார ஆசி பலனை
நாட்டிடுவேன் சுப்பிரமணியர் யானும்

**3.** யானுரைக்கும் ஞான வழிகளாக
உயர் ஞானி அரங்கன் காட்டும்
தானதரும சிந்தை பெருகவே
தமிழகத்தில் மக்களிடை தயவுநிலை

**4.** தயவுநிலை உருவாகி இனிதே
தமிழ் மண்ணை காக்கும் செயலாகி
செயல்பாடுகள் எல்லாம் மாறும்
சேவையென அரசியல் வழி வந்தவர்கள்

**5.** வந்தவர்கள் தலைமை பதவிகளை
வகிப்பவர்கள் கட்டாயம் தயவுக்கு
வந்து மக்களை மண்ணை காக்கும்
வரமான சேவை செய்யாவிடில்

**6.** செய்யாவிடில் பதவி சோடை கண்டு
செப்பிட மக்கள் ஆதரவில்லா
அய்யமும் பயமும் கண்டு நிலைகுலைந்து
ஆறுதலில்லா தவிக்க நேரும்

**7.** நேருமையின்றி தேர்தல் களம்
நிலவுலகில் நாடும் தலைமைகள்
பெருமையிழந்து பதவிகள் இழந்தும்
பொருள் வளமிழந்தும் வாட நேரும்

8. நேருமைபட சேவை ஆற்றவும்
நீதி காக்கவும் மக்களை காக்கவும்
மாறுதலை செய்து உண்மைபட
மக்கள் சேவை ஆற்றும் தலைமையே

9. தலைமையே கலியுகம் தன்னில்
தமிழகத்தில் தலைநிமிரக் கூடும்
பிழைபட ஊழல் பெருக்கமும்
பெண்களுக்கான பாதுகாப்புமில்லா

10. இல்லா சிக்கல் தொடர்ந்தால்
இயற்கை தன் கருணையை தரா
இல்லாமை காணும் நீர் நிலவளம்
எங்கும் சோடை பற்றிட நேரும்

11. நேருமை தரும் சூழல் மனபலம்
நிலவுலகை ஆளுமை புரிபவர்
தருமசிந்தைபட மாற்றம் காண
தவராசன் அரங்க ஞானி வாழும்

12. வாழும் துறையூர் எல்லை கண்டு
வணங்கி பிரணவக் குடிலில்
நாளும் தருமமிட்டு ஆசி பெற
ஞானவழிக்குவர நல் தலைமையாக உருவாகி

13. ஆகியே பாரதம் தமிழகம்
ஆளுமை திடம் கண்டு உயரும்
அகிலமதில் வளரும் நிலை பெறும்
அறிவித்த வார ஆசி முற்றே.

—சுபம்—

முருகப்பெருமான் துணை

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விளம்பி வருடம் பங்குனி மாதம் 17ம் நாள் 31.3.2019, ஞாயிறு முதல் பங்குனி மாதம் 24ம் நாள் 07.04.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

ஞானபலத்தினை மிகுதியாக கொண்ட மரபுமிக்க பாரத தேசத்திலும் ஞானிகளை வணங்கி அருள்பலம் மிகுதியாக பெற்றிட்ட தமிழகத்திலும் தானதருமங்களை செய்து ஏராளமாய் தானதரும பலத்தினை பெற்றிட்ட தமிழக பாரதத்தினில் விளம்பி வருடம் பங்குனி மாதம் 17ம் நாள் 31.03.2019, ஞாயிறு முதல் பங்குனி மாதம் 24ம் நாள் 07.04.2019 ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

சுப்பிரமணியராகிய யான் உரைக்கும் ஞானவழிமுறைகளோடு உயர் ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டுகின்ற தானதரும நெறியை கடைப்பிடித்து தானதரும சக்தியை பெருக்கினால் தமிழக மக்களிடையே தயவு நிலை பெருகி தமிழகம் தயவுமிக்க தேசமாகி தானதருமத்தின் சக்திகள் தமிழகத்தை காக்கும். தமிழகத்தில் நடக்கும் மாறான நிலைகளெல்லாம் மாறி நன்மைகள் உண்டாகும்.

மக்களுக்கு தொண்டுகள் செய்யும் புனிதமான அரசியலிற்கு வந்து தலைமை பதவிகளை வகிப்பவர்கள் இனியேனும் கட்டாயம் சுயநலம் மறந்து பொதுநலமாய் செயல்பட்டு தயவு உணர்வு மிகுந்தவர்களாக மாறி மக்களையும் தமிழகத்தையும் காப்பாற்றிட வழிவகைகள் செய்திட வேண்டும். மக்களுக்கு சேவைகள் செய்யும் மனப்பான்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். அவ்வாறில்லாமல் மக்கள் சேவையை மறந்து செயல்பட்டால் பதவியை இழந்திடவும் நேருகின்ற சூழல் உருவாகும். மக்களின் ஆதரவு இல்லாமல் போய் அவர்களுக்கு மனோபயமும், அச்சமும் உண்டாகி நிலைகுலைந்து போவார்கள். ஆதரவு இல்லாமல் தவிக்கின்ற துர்பாக்கிய நிலையை உடைய சூழ்நிலை உருவாகும்.

முறையோடு தேர்தல் களத்தில் செயல்படும் தலைவர்கள் மேன்மையுறுவார்கள். அவ்வாறு இல்லாமல் நேர்மையின்றி நடந்தால் தலைவர்கள் வீண் போவார்கள். அவர்களது நேர்மையற்ற செயல்களினால் பெருமை இழப்பார்கள், பதவிகளை இழப்பார்கள், பொருளாதாரத்தினையும் இழந்து வாடிட நேரிடும்.

நேர்மையுடன் மக்களுக்கு உண்மையாகவே சேவை செய்கின்ற தலைமை நீதியை காக்கும் தலைமை, மக்களை காக்கின்ற தலைமை நல்ல மாற்றங்களை செய்து மக்களுக்கு உண்மையுடன் நடக்கும் தலைமையே இந்த கலியுகத்தினில் இனி தமிழகத்தினில் தலைநிமிர்ந்து நிற்கும்.

அதைவிடுத்து தவறான பாதைகளில் சென்று ஊழல்களை அதிகம் செய்து பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சிக்கல்கள் இனியும் தொடர்ந்தால் இனி தமிழக மண்ணில் இயற்கை கருணை காட்டாது இயற்கை பொய்த்துவிடும். ஆதலால் தமிழகத்தில் வறுமையும் பஞ்சமும் உண்டாகும், நீர்வளம் குன்றியும், நிலவளம் குன்றியும், எங்கும் தீமையான பலன்களே உண்டாகிடும்.

நேர்மையான ஆட்சியை தருகின்ற சூழலையும் மனோபலத்தையும் பெற்று இவ்வுலகை ஆட்சி செய்து தருமசிந்தையுடன் நல்லாட்சி நடத்திட, ஆட்சி புரிவோர் தவராசன் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் வாழும் ஞானபூமி திருச்சி மாவட்டம் துறையூர் நகரை அணுகி ஞானசபையாய் ஏழாம் படை வீடாய் ஞானிகள் போற்றும் ஓங்காரக்குடிலினை நாடி வந்து ஓங்காரக்குடிலில் நடைபெறுகின்ற தானதருமப் பணிகளுக்கு தாராளமாய் பொருளுதவிகள் செய்து அரங்கமகானின் ஆசியை பெற்றிட, அவரெல்லாம் ஞானவழிக்கு வருவார்கள். அவர்கள் நல்ல தலைவர்களாக ஆகி பாரததேசம் தமிழகமும் நல்லாட்சி செய்வதற்கு உண்டான சூழ்நிலைகள் உருவாகி ஆட்சி பலமான ஆட்சியாக அமைந்து நிலை உயரும். உலகினில் இயற்கை வளமும் பெருகிடும் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

—சுபம்—